**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 208 நாள்: 15.06.2026

**மக்கள் தொகை கணக்கெடுப்பு-2027 களப்பயிற்சியாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி (15.06.2026 முதல் 17.06.2026) பயிற்சி வகுப்பினை கூடுதல் மாநகர மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர் / வட்டார துணை ஆணையர் (மத்தியம் மற்றும் தெற்கு) ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு -2027, களப்பயிற்சியாளர்களுக்கு இரண்டு கட்டங்களாக பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது. இதில் முதல் கட்ட பயிற்சி வகுப்பு 15.06.2026 முதல் 17.06.2026 வரையில் 5 பயிற்சி மையங்களிலும் மற்றும் இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பு 18.06.2026 முதல் 20.06.2026 வரை 3 பயிற்சி மையங்களிலும் நடைபெறவுள்ளது. இதில் முதல் கட்ட பயிற்சி வகுப்பில் 171 களப்பயிற்சியாளர்களுக்கு, கூடுதல் மாநகர மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்/வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலக கூட்டரங்கிலும் மற்றும் கூடுதல் மாநகர மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்/வட்டார துணை ஆணையர் (தெற்கு) அலுவலக கூட்டரங்கிலும் இன்று (15.06.2026) தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. இணையதளத்தின் மூலம் முதல் முறையாக டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முதல் பணி மக்கள் தொகை சுய கணக்கெடுப்பு (self enumeration) அடுத்த மாதம் ஜீலை 17 ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு வருகிற ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை 30 நாட்களுக்கு மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே, வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணிகள் தொடர்பாக கணக்கெடுப்பாளர்கள், மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி அளிக்க ஏதுவாக பெருநகர சென்னை மாநகராட்சி இளநிலை பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள், வரிமதிப்பீட்டாளர்கள் மற்றும் உரிமம் ஆய்வாளர்கள் ஆக மொத்தம் 256 அலுவலர்கள் களப்பயிற்றுநர்களாக முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், மக்கள் தொகை இயக்குநரக

அலுவலர் மற்றும் மாவட்ட புள்ளியியல் துறை துணை இயக்குநர் ஆகியோர் முதன்மை பயிற்றுநர்களாக (Master Trainer) சென்னை மக்கள் தொகை இயக்குநரகத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி பயிற்சி பெறும் களப்பயிற்சியாளர்கள் மூலம் சுமார் 11,000 கணக்கெடுப்பாளர்கள், 1,800 மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்படும்.

இந்நிகழ்வில் புள்ளியியல் துறை மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**